பாடல் - 2

மங்களம் செழிக்க கிருபையருளும்
மங்கள நாதனே

மங்கள நித்திய மங்களம் நீ
மங்கள முத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவ நீ
எங்கள் துங்கவ நீ
உத்தம சத்திய நித்திய தத்துவ
மெத்த மகத்துவ அத்தனுக்கத்தனாம்
ஆபிராம் தேவன் நீ

மங்கள மணமகன் ................ க்கும்
மங்கள மணமகள் ................ க்கும்
மானுவேலர்க்கும்,
மகானுபவர்க்கும்,
பக்தியுடன் புத்தி முத்தியளித்திடும்
நித்தியனே உனைத்
துத்தியம் செய்திடும்
சத்திய வேதர்க்கும்.

சங்கையில் நித்திய நாதனும் நீ
பங்கமில் சத்திய போதனும் நீ
மங்கா மாட்சிமை நீ, தங்கக் காட்சியும் நீ
இத்தரையித் திருமணத்தில் இருவர்
ஒத்து நல் இன்பம் உற்றிவர் வாழ்ந்திட
நடத்தியருளுமே.



***We thank you for your presence,***
***blessings and prayers on this happy occasion***
***of our children's wedding***





**'He hath made everything beautiful in his time.' - Eccl. 3:11**

# *Holy Matrimony*



..............

*Weds*

........................

on

.......... day, the ..th of ........ 202..

at 4.30 p.m.

**at CSI ST. GEORGE'S CTAHEDRAL**

**Chennai - 600 086.**

**மணமகன் ஆலயத்திற்குள் அமர்ந்திருக்க, மணமகள் ஆலயத்துக்குள் வருதல்**

(அனைவரும் எழுந்து நிற்பர்)

*வாழ்த்தும், வரவேற்பும்*

இது கடவுள் உண்டாக்கிய நாள், இதில் மகிழ்ந்து களிகூருவோம். **தி. பா. 118:24**

கடவுள் அன்புமயமானவர். அன்பில் நிலைத்திருப்பவர், கடவுளில் நிலைத்திருக்கிறார். - **1 யோ. 4:16.**

தந்தை, மைந்தன், தூயாவியாரின் திருப்பெயரில் இத்திருமண வழிபாட்டைத் தொடங்குவோம். **ஆமென்**

*தொடக்கப் பாடல்*

ஏதேனில் ஆதி மணம்
உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம்
மாறாதிருக்குமே.

இப்போதும் பக்தியுள்ளோர்
விவாகம் தூய்மையாம்
மூவர் பிரசன்னமாவார்
மும்முறை வாழ்த்துண்டாம்

ஆதாமுக்கு ஏவாளை
கொடுத்த பிதாவே
இம்மாப்பிள்ளைக்கிப் பெண்ணைக்
கொடுக்க வாருமே.

இரு தன்மையும் சேர்ந்த
கன்னியின் மைந்தனே
இவர்கள் இரு கையும்
இணைக்க வாருமே



பூதல ஆசீர்வாதத்தால்
பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே,
ஆசீர்வதித்திடும்
மாதிரளாக இவர் சந்ததியார்
வந்துதித்தும்மை பிரஸ்தாபிக்க
ஆ தேவக்கிருபை தீர்மானம்
ஆல் போல் அருளுமேன் - வீசீரோ

இம்மணவீட்டில் வாரீரோ
இயேசு ராயரே
உம் மணம் வீசச் செய்யீரோ
ஓங்கும் நேசமதால்
இம்மணமக்கள் மீதிறங்கிடவே
இவ்விருபேரையும் காக்கவே
விண்மக்களாக நடக்கவே
வேந்தா, நடத்துமே
- வீசீரோ

ஞான விவாகம் எப்போதும்
ஞாபகமாகவே
வான மணாளன் வாஞ்சித்து
வாழும் மனையாளாய்
ஆனந்தமாக தூய தன்மையதை
ஆடையாய் நீர் ஈயத் தரித்து
சேனையோடே நீர் வருகையில்
சேர்ந்து சுகிக்கவே
- வீசீரோ

**(சபையார் இடத்தில் அமர்ந்தவாறு பின்வரும் வாழ்த்துப் பாடல்களைப் பாட, மணமக்கள் பதிவேட்டில் கையெழுத்திடச் செல்வர்)**

**ஆசீர்வாதப் பாடல்கள்**

ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தம் மிகவே
நேசாஉதியும் சுத்தரே நித்தம் மகிழவே

வீசீரோ வான ஜோதி கதிரிங்கே
மேசியா எம் மணவாளனே
ஆசாரியரும் வான் ராஜனும்
ஆசீர்வதித்திடும்

இம் மணமக்களோடின்றும்
என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின் சென்றும்
ஓங்கச் செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத்தோடான்பைக்கியம் சூட்சமே
உம்மிலே தங்கித் தரிக்க
ஊக்கமருளுமே - வீசீரோ

ஒற்றுமையாக்கும் இவரை
ஊடாக நீர் நின்றே
பற்றோடும் மீது சார்ந்துமே
பாரில் வசிக்கவே
வெற்றி பெற்றோங்கும் இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் ஏக ராஜனாய்
ஏற்றவான் ராயர் சேயர்க்கே,
ஒப்பாய் ஒழுகவே - வீசீரோ



மெய் மணவாளனான
தெய்வ குமாரர்க்கே
சபையாம் மனையாளை
ஜோடிக்கும் ஆவியே.

நீரும் இந்நேரம் வந்து
இவ்விரு பேரையும்
இணைத்து, அன்பாய் வாழ்த்தி,
மெய் பாக்கியம் ஈந்திடும்.

கிறிஸ்துவின் பாரியோடே
எழும்பும் வரைக்கும்
எத்தீங்கில் நின்றும் காத்து
பேர் வாழ்வு ஈந்திடும்.

**ஆயர்:** எங்கள் முன்னோர்களான அனைத்து தாய், தந்தையருக்கும், அவர்கள் வழி தோன்றிய அனைவருக்கும் கடவுளே, உம்மாலே நாங்கள் வாழ்கிறோம். எங்கள் எதிர்பார்ப்புகள் எல்லாம் உம்மைச் சார்ந்தே இருக்கின்றன. உமது எண்ணிலடங்காத நன்மைகளுக்காக, உமது தூய திருப்பெயரை நன்றியுள்ள இதயத்துடன் வாழ்த்துகிறோம்.

மென்மையான உறவுகளும், அருள் நிரம்பிய எல்லா இணைப்புகளும் நிரம்பியுள்ள எங்கள் மனித வாழ்வுக்காக, சிறப்பாக திருமணம் என்ற தூய வாழ்வுக்காக உமக்கு நன்றி தெரிவிக்கிறோம். அன்பு என்ற உமது தூய-பரிசு பாதுகாக்கப்படவும், தூய்மைப்படுத்தப்படவும், முழுமையடையவும் திருமணத்தை நீர் நியமித்தியிருக்கிறீர். நிலையான அன்புக்கும், நிலையான வாழ்வுக்கும் நீரே ஆண்டவர். நீரே அனைத்து நன்மைகளுக்கும் ஊற்றாகவும் இருக்கிறீர். அனைத்து மகிழ்ச்சியையும் அருளுபவரும் நீரே!

இப்போதும், இந்த தூய இணைப்பில் இணைகின்ற உமது அடியவர்களான .......................... யும், .............................. யும் இங்கு அழைத்து வந்தமைக்கு நன்றியையும், வாழ்த்துதலையும்

தெரிவிக்கிறோம். இவர்கள் தங்கள் வாழ்வினை ஒருங்கிணைத்து, வாழும் காலமெல்லாம் ஒன்றித்து வாழ விருப்பம் தெரிவித்து, ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையும், அன்பும் வைத்து இங்கு வந்தமைக்காக உமக்கு நன்றி தெரிவிக்கிறோம். உமது உதவியின்றி நாங்கள் எதையும் செய்திட முடியாது ஆண்டவரே! இவர்கள் தங்கள் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரிய வாக்குறுதிகளை ஒருவருக்கொருவர் அளிக்கும்போது, தூயாவியார் உமது திருப்பெயரால் அருள்கூர்ந்து ...................... , .............. ................. என்பவருக்குள் நிறைவாய தங்கிட வேண்டுகிறோம். எளிய நம்பிக்கையோடு உமது அன்புள்ள பராமரிப்புக்கு தங்களை ஒப்படைக்கவும், உமது மாறாத அருளினைச் சார்ந்து திருமணம் என்ற உடன்படிக்கை வாழ்வுக்கு உட்படவும் உதவியருளும். எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். **ஆமென்.**

**மணமக்கள் நிற்க, இறைமக்கள் அமரவும்**

ஆயர்: பிரியமானவர்களே, இந்த மணமகன் ...................... யும், மணமகள் ........................................ யும திருமணத்தில இணைப்பதற்காக கடவுள் திருமுன்னிலையில் நாம் கூடிவந்திருக்கிறோம். திருமண வாழ்க்கை கடவுளால் நியமிக்கப்பட்டது. எல்லா மனிதரும் இதை மேன்மையானதாகக் கருதவேண்டுமென்று திருமறை கட்டளையிடுகிறது. நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து கலிலேயாவில் கானாவூரில் தம்முடைய பிரசன்னத்தால் அதனை ஆசீர்வதித்தது போல இந்த திருமணத்திலும் நம்மோடிருந்து ஆசீர்வதிக்க திருச்சித்தம் கொண்டுள்ளார்.

**திருமண வாழ்க்கையைக் குறித்து நமது ஆண்டவர் சொல்வதைக் கேளுங்கள்:**

படைப்பு முதல் கடவுள் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். இதினிமித்தம் ஒருவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள். ஆகவே இனி அவர்கள் இருவரல்லர். ஒரே உடலாய் இருக்கிறார்கள். இப்படியிருக்க, கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருப்பராக. **மாற்கு 10:6-9**



இரக்கமுள்ள ஆண்டவரே, குடும்பங்களை வடிவமைப்பவரே! .......................... , ...................................... பொறுப்புள்ள குடும்ப வாழ்வை நடத்த அருள்புரியும். பிள்ளை பாக்கியத்தை இவர்களுக்குத் தந்து அவர்களை உமது அறிவிலும், அன்பிலும், பணியிலும் வளர்க்க ஞானத்தைத் தந்தருளும். இந்நாளில் இங்கே வந்து இவர்கள் வாக்கு கொடுத்ததை கேட்டுக்கொண்டிருந்த அனைவரும் தங்கள் குடும்ப வாழ்வு பலப்படுத்தப்பட்டதை உணரவும், தங்கள் சொந்த வாக்குறுதிகளை புதுப்பித்துக்கொண்டுச் செல்லவும் அருள்புரிந்தருளும். இங்கு கணவராக, மனைவியாக, பெற்றோராக, பிள்ளைகளாக வந்துள்ள ஒவ்வொருவரும் ஒருவரில் ஒருவர் அன்பு கூர்ந்து, உறுதுணையாக இருந்து, தேவையுள்ளவர்களுக்கு பணி புரிந்து உமது ஆட்சிக்கு அடையாளங்களாக அமைந்திட உமது அருளை நிறைவாகத் தந்தருளும். உமது எல்லா பிள்ளைகளையும் ஒருவரோடொருவர் இணைக்கும் உறவுகள் யாவும் உமது ஆவியால் புதிதாக்கப்பட்டு உமது சமாதான வாழ்வும், நீதியும் இவ்வுலகில் நிறைந்திட வேண்டுமென்று எங்கள் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்ளுகிறோம். - **ஆமென்.**

நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும், தந்தையாம் கடவுளின் அன்பும், தூயாவியாரின் ஐக்கியமும் புதுமண தம்பதியரோடும், உங்கள் அனைவரோடும் நிலைத்திருப்பதாக. **ஆமென்.**

ஆறுதல் தருபவராகவும், மகிழ்ச்சியில் உடன் மகிழ்பவராகவும், இருப்பார்களாக. இவர்களது சித்தம் உமது சித்தத்தோடும், இவர்களது ஆவி உமது ஆவியாரோடும், பின்னிப் பிணைந்திருக்க அருள்தாரும். இவற்றின் வழியாக உம்மோடும், ஒருவரோடொருவரோடும் தங்கள் வாழ்வின் எல்லா நாட்களிலும், அன்பிலேயும், சமாதான-உறவிலேயும் வளர்ந்தேறச் செய்தருளவேண்டுமென்று எங்கள் நல்மேய்ப்பர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்ளுகிறோம். - **ஆமென்.**

அன்பின் கடவுளே! உமது அருளை என்றென்றும் இவர்களுக்குத் தந்தருளும். இவர்கள் தங்கள் குடும்ப வாழ்வை நடத்துகின்றபோது ஒருவேளை ஒருவரையோருவர் புண்படுத்தினால், அதை அவர்கள் உணர்ந்துகொண்டு, தங்கள் தவறுகளைச் சொல்லி உம்மிடமிருந்தும், ஒருவருக்கொருவரிடமிருந்தும் மன்னிப்பை நாடி பெற்றுக்கொள்ளவும் அருள்புரியும். பாவம் நிறைந்து பிளவுபட்டிருக்கிற இந்த உலகத்திற்கு, இவர்களது இணைபிரியா-வாழ்வு கிறிஸ்துவின் அன்புக்கு அடையாளமாக அமையச் செய்தருளும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, ஒருவர் மகிழ்ச்சியை ஒருவர் பகிர்ந்து, தங்கள் வீட்டின் கடமைகளை சேர்ந்து நிறைவேற்றி உம்முடைய வார்த்தைக்குக் கீழ்படிவதிலும், இவர்கள் எப்பொழுதும் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாயிருக்க இவர்களுக்கு அருள்புரியவேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்**

ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவே, நாசரேத்தூரில் குடும்ப வாழ்க்கையில் பங்குகொண்டவரே, இந்த உமது அடியாருடைய, வீட்டில் ஆண்டவரும், அரசனுமாய் இருந்து ஆட்சிபுரியும். நீர் மனிதருக்கு சேவை செய்தபடியே இவர்களும் பிறருக்குத் தொண்டுபுரிய அருள் தாரும். சொல்லாலும், செயலாலும் இவர்கள் தங்கள் அயலகத்தாருக்கு, உம்முடைய மீட்பின் அன்புக்குச் சாட்சிகளாயிருக்க அருள்புரியும். தந்தையோடும், தூய ஆவியாரோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து அரசாளுகிற உமது திருப்பெயரினாலே வேண்டிகொள்ளுகிறோம். **ஆமென்.**



ஆகையால், திருமணத்தை ஒருவரும் அற்பமாய் எண்ணி யோசனையின்றிச் செய்யாமல், கருத்தோடும் ஜெபத்தோடும் திருமணம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நோக்கங்களைச் சிந்தித்து அதைச் செய்வது அவசியம்.

**திருமணம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற நோக்கங்களாவன.**

1) கணவனும் மனைவியும் இன்பத்திலும் துன்பத்திலும், தங்கள் வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கொருவர் தோழமையும், உதவியும், ஆதரவும் அளிக்கவும்:

2) கடவுள் தாமே படைத்து, கிறிஸ்துவில், மீட்டுக் கொண்ட மனித-சுபாவ பாலியல் உணர்ச்சிகளை அவரே தூய்மைப்படுத்தி வழிநடத்தவும்.

3) குடும்பங்களில் பிள்ளைகள் பிறந்து, கடவுளுக்கு மகிமையாக, நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய அறிவில் வளர்க்கப்படவும்.

4) இவ்விதமாக திருமணத்தை மேன்மையுள்ளதாகக் கருதுவதால் மனுக்குலம் உறுதியான அடிப்படைகளில் நிற்கவுமே, திருமணம் எற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆயர்: ....................., ............................ ஆகிய இவ்விருவரும் இந்தத் தூய நிலைமையில் ஒன்றாக்கப்படுவதற்காக இங்கே வந்திருக்கிறார்கள். ஆனால், உங்களில் யாருக்காவது திருச்சபையின் நியமப்படியும், நாட்டின் சட்டப்படியும், இவ்விருவருக்கும் திருமணம் நடக்கக்கூடாதென்று நியாயமான தடை ஏதாவது தெரியுமானால் அதை இப்பொழுதே தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் இனி இதைக் குறித்து ஒருக்காலும் ஒன்றும் சொல்லக் கூடாது.

..................... , ....................... நீங்கள் இருவரும் திருமணத்தில் ஒன்றாய் இணைக்கப்பட கூடாதபடி உங்கள் இருவரில் யாருக்காவது ஏதாவது காரணமிருந்தால், அதை இப்பொழுதே தெரிவிக்க கடவுள் முன்னிலையில் உங்கள் இருவருக்கும் கட்டளையிடுகிறேன்.

(தடையில்லையெனில்)

**ஆயர்:** மன்றாடுவோம்! எல்லா வல்லமையும், மிகுந்த இரக்கமுள்ள கடவுளே, உம்முடைய உதவியின்றி நாங்கள் யாதொன்றையும் தகுந்த முறையில் செய்ய திராணியற்றவர்கள். இவ்விருவரையும் உமது பராமரிப்பின்படி வளர்த்து, இங்கே அழைத்து வந்திருக்கிறீர். ஆதலால், இவர்கள் இருவரும் உம்முன் திருமண ஒப்பந்தத்தில் உடன்படவும், இவர்கள் கொடுக்கப்போகும் வாக்குறுதிகளை உண்மையாய் பாதுகாக்கவும், உம்முடைய பேரருளை இவர்களில் பெருகச்செய்யவேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்கிறோம். **ஆமென்.**

**திருமண வாக்கு கொடுத்தல்**

**ஆயர்:** (மணமகனை நோக்கி)

.................... , என்ற நீர், ...................... என்ற இவரை உம் மனைவியாக எற்றுக் கொண்டு, அவரை மாத்திரம் உம் வாழ்க்கை முழுவதும் பற்றிக்கொண்டு வாழ்வீரா?

மணமகன்:

**ஆம், பற்றிக்கொண்டு வாழ்வேன்.**

**ஆயர்:** (மணமகளை நோக்கி)

............................ என்ற நீர், ................ என்ற இவரை உம் கணவராக எற்றுக் கொண்டு அவரை மாத்திரம் உம் வாழ்க்கை முழுவதும் பற்றிக்கொண்டு வாழ்வீரா?

மணமகள்:

**ஆம், பற்றிக்கொண்டு வாழ்வேன்.**

**ஆயர்:** மணமக்களின் பெற்றோர் முன்பாக வரவும்

*அவர்கள் முன்பாக வருதல்*

**ஆயர்:** (பெற்றோரை நோக்கி) அன்பார்ந்த பெற்றோரே! உங்கள் ஆசீர்வாதத்தை ....................... க்கும், ............................ க்கும் அளித்து, அவர்களது திருமண வாழ்வில் அவர்களைத் தாங்கிட உங்களாலான அனைத்தையும் செய்வீர்களா?

**பெற்றோர்:** எங்கள் ஆசீர்வாதத்தையும், அன்பான ஒத்துழைப்பையும் இவர்களுக்கு வழங்கிட வாக்களிக்கிறோம்.



**ஆயர்:** இறை மன்றாட்டுச் செய்வோம்.

ஆயர்: ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும்.

**சபை: கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்**

ஆயர்: ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும்

**சபை:** விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே! உமது பெயர் தூயதெனப் போற்றப்பெருக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். ஆட்சியும், வல்லமையும், மாட்சியும், என்றென்றும் உமக்கே. **ஆமென்.**

ஆயர்: ஆண்டவரே, .................. என்ற உமது அடியானையும், ................................ என்ற உமது அடியாளையும் இரட் சியும்.
**சபை: இவர்கள் உம்மையே நம்பியிருக்கிறார்கள்.**

ஆயர்: ஆண்டவரே, பரத்திலிருந்து ஒத்தாசை அனுப்பியருளும்.
**சபை: இவர்களை என்றென்றைக்கும் காப்பாற்றியருளும்.**

ஆயர்: இவர்களுக்குப் பலத்த அரணாயிரும்
**சபை: பகைவரினின்று இவர்களைத் தப்புவியும்.**

ஆயர்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
**சபை: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேர்வதாக.**

நித்திய கடவுளே, எல்லா உயிர்களின் படைப்பாளரே, பாதுகாப்பவரே! ஆனைத்து அருளையும் அருள்பவரே! நீர் உருவாக்கி மீட்டுக்கொண்ட இவ்வுலகையும், குறிப்பாக ........................... , ..................................... நீர் கண்ணோக்கிப் பார்த்தருளும். இவர்களது ஒருங்கிணைந்த வாழ்வில் ஞானத்தையும், ஒருவரை ஒருவர் பற்றிக்கொள்ளும் தன்மையையும் தந்தருளும். அப்போது இவர்கள் ஒருவருக்கொருவர், பெலவீன நேரத்தில் ஒருவரை ஒருவர் பலப்படுத்துகிறவர்களாகவும், மனக்குழப்பத்திலுள்ள நேரத்தில் ஒருவருக்கொருவர் ஆலோசகராகவும், துக்க நேரத்தில்

## <u>*ஆரோனின் வாழ்த்து*</u>

ஆண்டவர் உம்மை ஆசீர்வதித்து
உம்மைப் பாதுகாத்திடுவார்.
ஆண்டவர் உம் மேல் மனதுருகி
புன்னகைச் செய்து அருள்புரிவார்.
ஆண்டவர் உமக்கு ஆதரவாய் நின்று,
சமாதான வாழ்வை உமக்களிப்பார். **ஆமென்**

**(Translated from Amplified Bible)**

***திருவசனங்கள் படிக்கப்படும்:*** 1 **கொரிந்தியர்** 13:1-13

**அருளுரை**

(மணமக்கள் திருமேடையண்டை செல்ல, பாடகர் குழு பாடும் பாடல்)

**சங்கீதம்** 128

பயந்து கர்த்தரின் பாதையதனில்
பணிந்து நடப்போன் பாக்கியவான்

முயன்று உழைத்தே பலனை உண்பான்
முடிவில் பாக்கியம், மேன்மை காண்பான்

உண்ணுதற்கினிய கனிகளைத்தரும்
தண்ணிழல் திராட்சைக் கொடி போல் வளரும்
கண்ணிய மனைவி மகிழ்ந்து இருப்பாள்
எண்ணரும் நலன்கள் இல்லத்தில் புரிவாள்

ஒலிவ மரத்தை சூழ்ந்து மேலே
உயரும் பச்சிளங் கன்றுகள் போலே
மெலிவிலா நல்ல பாலருன்பாலே
மிகவும் களித்து வாழ்வர் அன்பாலே

ஆண்டவர் வீட்டைக் கட்டாவிடில் அதை
அளந்து கட்டுவோர் உழைப்பு வீணாகும்,
ஆண்டவர் அருளும் செல்வமே பிள்ளைகள்
அன்புள்ள பிள்ளைகள் அவரின் பரிசு.

ஆண்டவர் சீயோனில் இருந்து உமக்கு
ஆசி வழங்கிட, நல்வாழ்வைக் காண்பாய்
பிள்ளைகளின் பிள்ளைகளை நீ காண்பாய்
புதிய இஸரேல் நலமுடன் வாழும்!



**பெற்றோர் மணமக்களின் வலது கைகளை இணைப்பார்கள். பெற்றோரில் ஒருவர் இறைவேண்டல் செய்வார்.**

(இதன்பின் பொற்றோர் இருப்பிடம் செல்லலாம்)

**ஆயர் திருச்சபையாரைப் பார்த்து கூறுதல்**

இந்நாளின் எல்லா வாக்குறுதிகளுக்கும் சாட்சிகளாயிருக்கின்ற நீங்கள் யாவரும், ........................................................ என்ற இவர்களது திருமண வாழ்வை ஜெபத்தில் தாங்கிடவும், இவர்களது வாழ்வு சிறக்க உங்களாலான அனைத்து உதவிகளையும் செய்வீர்களா?

இறைமக்கள்: **கடவுளின் உதவியுடன் அவ்விதமே செய்வோம்.**

**மணமகன், மணமகளைப்பார்த்து சொல்லுவது:**

.................. என்ற நான், ............................. என்ற உம்மை என் மனைவியாக ஏற்றுக்கொண்டு, இன்று முதல் நன்மையிலும், தீமையிலும், வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும், சுகவீனத்திலும், நாம் இருவரும் உயிருள்ளவரை கடவுளுடைய தூய நியமப்படி உம்மை நேசிக்கவும், காப்பாற்றவும் வாக்குக் கொடுக்கிறேன்.

**மணமகள் மணமகனைப்பார்த்து சொல்லுவது:**

............................ என்ற நான், ...................... என்ற உம்மை என் கணவராக ஏற்றுக்கொண்டு, இன்று முதல் நன்மையிலும், தீமையிலும், வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும், சுகவீனத்திலும், நாம் இருவரும் உயிருள்ளவரை கடவுளுடைய தூய நியமப்படி உம்மை நேசிக்கவும், காப்பாற்றவும் வாக்குக் கொடுக்கிறேன்.

**ஆயர்:** இவ்வாக்குறுதிகளைக் கடவுள் கேட்டார், நாமும் கேட்டு இதற்கு சாட்சிகளாய் இருக்கிறோம்.

(யாவரும் முழங்காலில் இருந்து இப்பாடலை இறைமன்றாட்டாகப் பாடவும்)

புத்திக்கெட்டாத அன்பின் வாரீ, பாரும்,
உம்பாதம் அண்டினோமே, தேவரீர்

விவாகத்தால் இணைக்கும் இருபேரும்
ஒன்றாக வாழும் அன்பை ஈகுவீர்.

ஆ, ஜீவ ஊற்றே, இவரில் உம்நேசம்
நல் நம்பிக்கையும், நோவு சாவிலும்
உம்பேரில் சாரும் ஊக்க விசுவாசம்
குன்றாத தீரமும் தந்தருளும்.

பூலோகத் துன்பம் இன்பமாக மாற்றி,
மெய்ச் சமாதானம் தந்து தேற்றுவீர்,
வாழ்நாளின் ஈற்றில் மோட்சகரையேற்றி
நிறைந்த ஜீவன், அன்பும் நல்குவீர்.

**(திருமாங்கல்யத்தை ஆசீர்வதித்து ஏறெடுக்கும் ஜெபம்)**

**ஆயர்:** இரக்கமுள்ள ஆண்டவரே, இந்தத் திருமாங்கல்யத்தை அளிப்பவரும், இதை அணிந்து கொள்ளுபவரும் ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்கவும், தங்கள் ஆயுள் முழுவதும் அன்பில் நிலைத் திருக்கவும், இத்திருமாங்கல்யத்தையும், இம்மணமக்களையும் நீர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக் கொள்கிறோம். **ஆமென்**

*(சபையார் எழுந்துநிற்கவும்)*

*மணமகன், மணப்பெண்ணின் முகத்திரையை விலக்கி திருமாங்கல்யத்தை அணிவித்தல்.*

*திருமாங்கல்யத்தை அணிவித்தபின், அதைப் பிடித்துக்கொண்டே மணமகன் சொல்லுவது:*

**உறுதியான நம்பிக்கைக்கும், நிலையான அன்பிற்கும் அடையாளமாக இந்தத் திருமாங்கல்யத்தை உமக்கு அணிவிக்கிறேன். என்னுடைய உள்ளத்தாலும், உடலாலும் உம்மைக் கனப்படுத்துகிறேன். என் உலகப் பொருள் அனைத்தையும் உம்மோடு பகிர்ந்து கொள்ளுகிறேன். தந்தை, மைந்தன், தூய ஆவியாரின் திருப்பெயரில் ஆமென்.**



*திருமாங்கல்யத்தைப் பிடித்துக்கொண்டே மணமகள் சொல்லுவது:*

**உறுதியான நம்பிக்கைக்கும், நிலையான அன்பிற்கும் அடையாளமாக இந்தத் திருமாங்கல்யத்தை உளமாற ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய உள்ளத்தாலும், உடலாலும் உம்மைக் கனப்படுத்துகிறேன். என் உலகப் பொருள் அனைத்தையும் உம்மோடு பகிர்ந்து கொள்ளுகிறேன். தந்தை, மைந்தன், தூய ஆவியாரின் திருப்பெயரில் ஆமென்.**

*மணமக்கள் முழங்கால்படியிடுதல்*

ஆயர் : .......................... , ............................. என்ற இவர்கள் கடவுளுக்கு முன்பாகவும், இந்த திருஅவைக்கு முன்பாகவும், ஒருவருக்கொருவர் தங்கள் வாக்குறுதியைத் தெரிவித்திருக்கிறபடியால், இவர்கள் கடவுளுடைய நியமப்படியும், நம் நாட்டின் சட்டப்படியும், கணவனும், மனைவியுமாய் இருக்கிறார்கள் என்று தந்தை, மைந்தன், தூய ஆவியாரின் திருப்பெயரினாலே தெரிவிக்கிறேன். **ஆமென்.**

**ஆகையால், கடவுள் இணைத்தவர்களை மனிதர் பிரிக்காதிருப்பாராக.**

***மணமக்கள் இருவரும் முழங்கால்படியிட, சபையார் அனைவரும் நிற்க, ஆயர் ஏறெடுக்கும் ஜெபம்:***

மகா இரக்கமும் அருளும் நிறைந்த கடவுளே, பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும் முதல் காரணராயிருக்கிற எங்கள் தந்தையே, இப்பொழுதும் உமது திருப்பெயரில் நாங்கள் ஆசீர்வதிக்கிற .................... , ............. ......................... என்ற இவர்கள் மேல் உமது ஆசீர்வாதத்தை அனுப்பியருளும். இவர்கள் உண்மையாய் இசைந்து வாழ்ந்து, தங்களுக்குள் செய்து கொண்ட உடன்படிக்கையையும், வாக்குறுதியையும் திட்டமாய்ப் பாதுகாத்து, உமது நியமங்களின்படி நடக்க அருள்புரிவீராக. எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்கிறோம். - **ஆமென்.**

தந்தையாம் கடவுள், திருமைந்தராம் கடவுள், தூய ஆவியாராம் கடவுள் உங்களை ஆசீர்வதித்துப் பராமரித்துப் பாதுகாப்பாராக. ஆண்டவர் உங்களை இரக்கமாய்க் கண்ணோக்கி, நீங்கள் இவ்வாழ்க்கையில் சேர்ந்து வாழ்வதனால் மறுமையில் நிலையான வாழ்வைப் பெற்றுக்கொள்ள, உங்களை அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாலும், அருளாலும் நிரப்புவாராக. - **ஆமென்.**